ICTA
ideas actioned

# இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் முகவராண்மை (ICTA)

# ICTA இன் உத்தியோகபூர்வ பாவனைக்காக SUV வாகனமொன்றை வாடகைக்கு பெறுவதற்கான பெறுகை

## Contract No.: ICTA/GOSL/SER/NCB/2022/01

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

1. சாரதி மற்றும் எரிபொருள் நீங்கலாக ICTA இற்கு SUV வாகனமொன்றை வாடகைக்கு பெறுவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ICTA இன் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
2. இலங்கை அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிகளினால் கட்டுப்படுத்தப்படும் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையை பாவித்து விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
3. விலைமனுக்கோரல் ஆவணங்களின் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
4. 2022 மார்ச் 07ஆம் திகதியிலிருந்து 2022 மார்ச் 15ஆம் திகதி வரையும் **procurement@icta.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 2,500 இலங்கை ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்தப்பட்ட பணக்கொடுப்பனவு துண்டுடன் விண்ணப்பதாரியின் தலைப்புக் கடிதத்தில் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்த பின்னர் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று மின்னஞ்சல் வழியாக வழங்கப்படும்.
5. 2,500 இலங்கை ரூபாவான மீளளிக்கப்படாத கட்டண பணக்கொடுப்பனவானது மிலாகிரிய கிளை இலங்கை வங்கியின் 77897587 என்ற இலக்கத்திற்கு ICT Agency Gov. என்ற பெயரில் வரவு வைக்கப்படல் வேண்டும்.
   (குறிப்பு: பண வைப்புத் துண்டில் ''மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்'' என பணவைப்பாளரின் விபரங்கள் மற்றும் வரவு வைக்கப்படும் நோக்கம் ஆகியவற்றிற்காக தயவு செய்து பூர்த்தி செய்யப்படுவதுடன் மேலே கூறப்பட்டுள்ள ரொக்கப் பண வரவுத் துண்டை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் கட்டாயமானதொன்றாகும். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பதுடன் ஏனைய பணக்கொடுப்பனவுகள் அனுமதிக்கப்பட மாட்டாது.)
6. 2022 மார்ச் 18 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-03, ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை, 490 ஆம் இலக்கத்தின் தரைமாடியிலுள்ள இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிற்நுட்பவியல் முகவரான்மை முகவரியில் இரு பிரதிகளில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் அனைத்து விலைமனுக்களும் 75,000 இலங்கை ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது அதன் செல்லுபடியாகும் திகதியிலிருந்து 28 நாட்களுக்கு அப்பால் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-03, ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை, 490 ஆம் இலக்கத்திலுள்ள ICTA இன் பெறுகைக்கான பணிப்பாளரிடமிருந்து அல்லது **procurement@icta.lk** என்ற மின்னஞ்சல் வழியாக பெற்றுக் கொள்ளலாம். பரீட்சித்தல் நோக்கங்களுக்காக மாத்திரம் **https://www.icta.lk/procurement/** என்ற இணையதளத்திலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் முகவராண்மை.**
**2022 மார்ச் 07 ஆம் திகதியன்று.**